## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.26/2011

2026 –ம் ஆண்டு ஜனவரி மாதம் 23 –ம் நாள்வாதிகள் தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 23.01.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கண்ணப்பன் (PW– 2) | வயது | : | 65/2025 |
| த/க பெயர் | : | திரு. அருணாச்சலம் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | வேங்கைபுரம் | வட்டம் | : | மன்னார்குடி |

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கு சொந்த ஊர் எது என்றால் வேங்கைபுரம். வாதியும் வேங்கைபுரம் என்றால் சரிதான். நானும் வாதியும் உறவினர் என்றால் சரிதான். நானும் வாதியும் சேர்ந்து தான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தோம் என்றால் ஜெயராமன் செய்து வந்தார் நான் இல்லை. வாதி பெரும்பாலான நாட்களில் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பார்க்கலாம் என்றால் சரிதான்.
2) யார் யார் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சிங்காரவேலு மகன்கள் மீது ஜெயராமன் வழக்கு தாக்கல் செய்துள்ளார். சிங்காரவேலு மன்னார்குடி பத்தர் சமுகத்திலும், நகை கடை உரிமையாளர் சங்கத்திலும், வர்த்தக சங்கத்திலும் தலைவராக பொறுப்பில் இருந்தவர் என்றால் சரிதான். சிங்காரவேலு பத்தர் வீடு மன்னார்குடியில் எங்கு உள்ளது என்றால் கம்மாள தெருவில் உள்ளது. சிங்காரவேலு பத்தர் மகன் எங்கு உள்ளார் என்றால் காணாமல் போய்விட்டார்.
3) சிங்காரவேலு பத்தர் சம்பந்தப்பட்ட ஆவணத்தில் நான் கையெழுதிட்டேனா என்றால் கையெழுத்திட்டுள்ளேன். அது என்ன அவணம் என்றால் நிலம் விற்று வாங்கும் பத்திரம். யார் யாருக்கு எழுதி கொடுத்தார் என்றால் ஜெயராமனுக்கு சிங்காரவேலு 2001 இல் எழுதி கொடுத்தார். எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் வேங்கைபுரத்தில் எழுதப்பட்டது.
4) பொதுவாக சொத்தை வாங்கி விற்கும் நடைமுறையில் விற்கும் நபரை தேடி தான் வாங்கும் நபர் வருவார் என்றால் சரிதான். சிங்காரவேலு வீட்டிற்கும்

தாவா சொத்திற்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு இருக்கம் என்றால் மூன்று கிலோ மீட்டர் இருக்கும். வேங்கைபுரத்தில் பத்திர அலுவலகம், ஆவண எழுத்தர் உள்ளதா என்றால் இல்லை, வேங்கைபுரத்தில் வேலாயுதம், நானும், பழனிவேலு மற்றும் சிங்காரவேலு ஆகியோர் வேலாயுதம் வீட்டில் வைத்து ஆவணம் எழுதினோம்.

5) சொத்தை விற்பனை செய்தவர் மன்னார்குடியை சேர்ந்தவர், வாங்கியவர் வேங்கைபுரத்தை சேர்ந்தவர் என்ற நிலையில் சிங்காரவேலு ஏன் வேங்கைபுரத்திற்கு சென்று பத்திரம் எழுதினார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, வேங்கைபுரத்தில் சிங்காரவேலுக்கு நிலம் உள்ளது. ஆவணத்தை எழுதி கொடுத்தவர் ஏதாவாது ஆவணத்தை காண்பித்து ஆவணம் எழுதினாரா என்றால் இல்லை.

6) எதை பார்த்து சர்வே எண் சொல்கிறேன் என்றால் சிங்காரவேலு பத்தர் சொன்னார். எந்த தேதியில் ஆவணம் எழுதப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. அந்த ஆவணத்தில் யார் யார் கையெழுத்திட்டார்கள் என்றால் நானும், பழனிவேலும், சிங்காரவேலும், வேலாயுதமும் கையெழுத்திட்டோம். அனைவரும் ஒரே பேனாவில் கையெழுத்திட்டோமா என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கள் அனைத்தும் வெவ்வேறு பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், சிங்காரவேலு தனியாக பேனா வைத்து கையெழுத்திட்டார்.

7) தாவா சொத்திற்கு எவ்வளவு விலை நிர்ணயம் செய்யப்பட்டு கிரய ஒப்பந்தத்தில் ரூபாய். 21600/– க்கு நிர்ணயம் செய்யப்பட்டது. அந்த பணம் யாருக்கு யார் கொடுத்தார் என்றால் ஜெயராமன் சிங்காரவேலுக்கு கொடுத்தார். எந்த வகையான நோட்டு கொடுத்தார் என்றால் அனைத்து வகையான நோட்டும் கலந்து கொடுத்தார். கெடு விதித்து ஒப்பந்தம் எழுதப்பட்டதா என்றால் இல்லை.

8) தாவா சொத்து எங்கு உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் வேங்கைபுரத்தில் உள்ளது. இந்த சொத்து சம்பந்தமாக இரண்டு வழக்கு உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சிங்காரவேலு சொத்தில் ஜெயராமன் அத்துமீறி உள்ளே நுழைந்து வீடு கட்டியுள்ளதால் அதனை மீட்க வேண்டி சேகர், பானுமதி ஆகியோர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான், சொத்தை வாங்கிய பின்னர் வீடு கட்டினார்.

9) சிங்காரவேலு சொத்தில் ஜெயராமன் அத்துமீறி உள்ளே நுழைந்து வீடு கட்டியுள்ளதால் அதனை மீட்க வேண்டி சேகர், பானுமதி ஆகியோர் வழக்கு

தாக்கல் செய்த பின்னர் மேற்படி வழக்கை எதிர்வாதம் செய்வதற்காக மோசடியான கிரய ஒப்பந்தத்தை நானும் ஜெயராமனும் ஏற்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்து அதன்பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே இந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டிருந்தால் மன்னார்குடியை சேர்ந்தவர்கள் சாட்சிகளாக இருந்திருப்பார்கள் என்றும், நாங்களே ஆவணத்தை உற்பத்தி செய்ததால் வேங்கைபுரத்தை சேர்ந்தவர்களை சாட்சிகளாக போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.01.23 17:30:08 +0530

District Munsif
Mannargudi.